மாண்புமிகு பேரவைத் தலைவர்: வினாக்கள்-விடைகள் நேரம் முடிவுற்றது.

[குறிப்பு: ஓர் உரையின் தொடக்கத்தில் உடுக்குறி (*) இடப்பெற்றிருந்தால் அவ்வுரை உறுப்பினரால் சரிபார்க்கப் பெற்றது என்பதைக் குறிக்கும்.]

2. அறிவிப்பு

மானியக் கோரிக்கைகள், 2005-2006, பேரவையில் முன்மொழிதல் (ஆ.செ.)

மாண்புமிகு பேரவைத் தலைவர்: பேரவைக்கு ஓர் அறிவிப்பு. 2005-2006 ஆம் ஆண்டிற்கான மானியக் கோரிக்கைகளைப் பேரவையில் முன்மொழிவது குறித்து ஆளுநர் அவர்களிடமிருந்து கீழ்க்காணும் செய்தி வரப்பெற்றுள்ளது:

"In pursuance of Clause (3) of Article 203 of the Constitution of India, I, Surjit Singh Barnala, Governor of Tamil Nadu, hereby give my recommendation to the moving in the Tamil Nadu Legislative Assembly, of the demands for Grants for the financial year 2005-2006."

3. தகவல் கோரல்

உறுப்பினர்கள் கொடுத்துள்ள முன்னறிவிப்பு

திரு. இ. புகழேந்தி: மாண்புமிகு பேரவைத் தலைவர் அவர்களே, நாங்கள் ஓர் உரிமைப் பிரச்சினையை மாண்புமிகு நிதி அமைச்சர் அவர்கள்மீது கொடுத்திருக்கிறோம்...

மாண்புமிகு பேரவைத் தலைவர்: இல்லை, இல்லை. ஏற்கெனவே அதற்குப் பதில் அனுப்பப்பட்டு விட்டது.

திரு. இ. புகழேந்தி: அதுகுறித்து விவாதம் பண்ணுவதற்கு..

மாண்புமிகு பேரவைத் தலைவர்: விவர்தம் இல்லை. பதில் அனுப்பப்பட்டு விட்டது. பதில் அனுப்பப்பட்டு விட்டது என்றால், அதற்குப் பிறகு ஒன்றும் இல்லை. அதற்குரிய, பேரவைத் தலைவருடைய பதில் உங்களுக்கு வந்து சேர்ந்துவிட்டது.